Registered as a Newspaper in Ceylon * விலை சதம் 10

# ஈழநாடு

EELANADU

தபாற்பெட்டி எண். 49
போன் 389

National Tamil Daily

மலர் 9
இதழ் 361
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் பிலவங்க தை 26 ஜுல்ஹஜ் 9 வெள்ளிக்கிழமை (9-2-68)

தந்தி : வைரம்

தொலைபேசி : 7199

பொ. அம்பலவாணர்



தங்க, வைர, நகை வியாபாரம்.

119, கஸ்தூரியார் ரோட், யாழ்ப்பாணம்.

# தெ.வியட்னாமில் வட வியட்னாம் படைகள் துரித முன்னேற்றம்

## "சிறுபான்மை இனத்தின் உரிமைகளை பாதுகாப்போம்"

### கல்முனையில் பிரதமர் டட்லி

கல்முனை, வியாழன்

இலங்கையில் வாழும் சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள், பறங்கியர் எல்லோரும் இந்நாட்டில் சம உரிமை பெற்று சுதந்திர பிரஜைகளாக வாழ்கிறோம் என்று நினைக்க வேண்டுமென்பதற்காகவே நான் பாடுபடுவேன்.

கல்முனையில் நடைபெற்ற தேர்தல் கூட்டமொன்றில் தமிழரசுக் கட்சி அபேட்சகர் ஜனாப் மசூர் மௌலானாவை ஆதரித்துப் பேசுகையில் பிரதமர் திரு. டட்லி சேனநாயகா உறுதியளித்தார்.

தாம் பிரதமராயிருக்கும் போது சுதந்திரதினம் முதன் முறையாக கிழக்கு மாகாணத்தில் கொண்டாடப்படுவதையிட்டு அவர் மகிழ்ச்சி தெரிவித்தார்.

நாட்டில் வாழும் எல்லா சமுதாயத்தவரும் ஒற்றுமைப்பட்டால்தான் இன்று எமக்கு மிகவும் அவசிய மாக தேவைப்படும் பொருளாதார சுதந்திரத்தைப் பெறலாம். முந்திய அரசின் கீழ் இவ்வொற்றுமை சிதறடிக்கப்பட்டது. பொதுமக்களிடையே துவேஷ உணர்ச்சிகள் கிளப்பப்பட்டதைப் பற்றி நான் உங்களுக்கு ஞாபகப்படுத்த வேண்டியதில்லை. எனது அரசின் முதற் கருமங்களில் ஒன்று தமிழ் மொழிக்கு ஒரு தகுதியான ஸ்தானத்தை அளித்ததே. ஒவ்வொரு முறையும் நாடாளுமன்ற பிரதிநிதிகளை தெரிவுசெய்வதுடன் ஜனநாயகம் முடிந்துவிடாது. அதுமக்கள் உரிமைகளை உறுதிப்படுத்த வேண்டும். பெரும்பான்மையினம் சிறுபான்மையினத்தின் உரிமைகளை பாதுகாக்க வேண்டும். சிறுபான்மை உரிமைகளை பெரும்பான்மையினம் கொடுக்க மறுத்தால் அது ஜனநாயகமாகாது. தேசிய அரசாங்கம் உண்மையான ஜனநாயக வாழ்க்கையை நிலைநாட்ட போராடுகிறது என்றும் பிரதமர் சொன்னார்.

## மாணவ ஆசிரியர் பரீட்சைக்கு இதுவரை 75,000 விண்ணப்பம்

கொம்பனித்தெரு, வியா.

இவ்வருடம் ஆகஸ்ட் மாதம் 2-ம், 3-ம் திகதிகளில் நடைபெறவிருக்கும் மாணவ ஆசிரியர் பரீட்சையின் விண்ணப்பக் கடைசித்திகதி ஏப்ரல் மாதமாகும். இவ்வாண்டு நடைபெறவிருக்கும் மாணவ ஆசிரியர் பரீட்சைக்கு விண்ணப்பம் செய்தோர் தொகை எழுபத்தி ஐயாயிரத்திற்கு மேல் தாண்டிவிட்டதாகவும் ஏப்ரல் மாதத்திற்குள் விண்ணப்பிப்போர் தொகை ஒரு லட்சம் பரீட்சார்த்திகளுக்கு மேலாகிவிடும் என்றும் பரீட்சைப் பகுதியைச்சேர்ந்த அதிகாரிகள் கூறுகின்றனர்.

இதற்குமுன் நடைபெற்ற மாணவ ஆசிரியர் பரீட்சையின் பெறுபேறுகள் தற்சமயம் பரீட்சைப் பகுதியினரால் பரிசிலனை செய்யப்பட்டு கல்வி அமைச்சுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

## ஹமீட் புதிய உபசபாநாயகர்?

கொழும்பு, வியா.

அக்குரனை எம். பி. திரு. ஏ. சி. எஸ். ஹமீப் விரைவில் புதிய உபசபாநாயகராகப் பதவியேற்கவிருப்பதாகத் தெரிகிறது.

உபசபாநாயகர் சேர் ரஸிக்பரீத் இலங்கையின் மலேஷியா ஹைகமிஷனராகப் பதவி ஏற்றுச் செல்லவிருப்பதாகவும் இதைத் தொடர்ந்து இந்த மாற்றம் நடைபெறவிருப்பதாகவும் தெரிகிறது.

பிரதமர் திரு. டட்லிசேனநாயக்கா ஹமீதுடனும் ஆலோசனை நடாத்தியதாகவும், திரு. ஹமீட் உபசபாநாயகர் பதவியை ஏற்றுக் கொள்வதற்குச் சம்மதம் தெரிவித்[illegible] தெரியவந்துள்ளது.

## லாங்-வேயை பிடித்து கெயிங் ஸாங்மீது தாக்குதல்

### சைகோனிலிருந்து வெளிநாட்டு தூதரகத்தினர் வெளியேறுவர்?

லண்டன், பெப். 8

தென்வியட்னாமில் அமெரிக்க விசேஷ ராணுவநிலையமான லாங்-லேயை வடக்கு வியட்னாம் துருப்புக்கள் கைப்பற்றியதை தென் வியட்னாம் ராணுவத்தலைமை நிலையம் ஒப்புக்கொண்டிருக்கிறது. லாங்வே வீழ்ச்சியடைந்ததைத் தொடர்ந்து அதற்கு சில மைல் தூரத்திலுள்ள அமெரிக்காவின் பிரதான இராணுவத் தளமான கெயி-ஸாங் தளம் மீது வடவியட்னாம் படைப் பிரிவு ஒன்று கடும் தாக்குதல் நடத்தத் தொடங்கியிருக்கிறது. மோட்டார்கள், ராக்கெட்டுகள் மூலம் வடவியட்னாம் படைகள் தாக்குதல் நடத்துகின்றனர். சென்ற ஒன்பது தினமாக நடைபெற்றுவரும் சண்டையில் இதுவே மிக மோசமான சண்டையாம்.

இதேசமயம் சைகோனிலும், ஹியூவிலும் பலத்த சண்டை தொடர்ந்து நடைபெற்று வருவதாகவும் சைகோனிலுள்ள வெளிநாட்டுத் தூதரகங்கள் தம் அதிகாரிகளை வேறு இடங்களுக்கு மாற்றுவதற்கான முயற்சிகளை மேற்கொண்டுள்ளன

வியட்னாமிலுள்ள மேற்கு ஜெர்மன் மக்களை அங்கிருந்து பாதுகாப்பான இடங்களுக்கு அகற்றுவதில் மேற்கு ஜெர்மன் தூதரகம் ஈடுபட்டுள்ளது.

(3-ம் பக்கமும் பார்க்க)

இலங்கை வரும்

## தென்னிந்திய உதைபந்தாட்டக் கோஷ்டி

நாவலப்பிட்டி, வியா.

தென்னிந்தியாவின் புகையிரதசேவை உதைபந்தாட்டக்கோஷ்டி, நாவலப்பிட்டி உதைபந்தாட்டச் சங்க கோஷ்டியுடன் இம்மாதம் 17-ம் திகதி மாலை நாவலப்பிட்டி ஜயதிலக திடலில் சிநேகபூர்வ போட்டியில் கலந்துகொள்ளவிருக்கின்றது.

இந்தியாவின் சர்வதேச உதைபந்தாட்ட வீரரும் மைசூர் கோஷ்டி தலைவருமான திரு. பி. வி. ஞானகிராம் உட்பட, ஜாகர்த்தா ஒலிம்பிக்ஸ் ரோம், டெல் அவிவ் (இஸ்ரேல்) ஆசிய போட்டிகளில் கலந்துகொண்ட இந்திய உதைபந்தாட்ட வீரர்கள் தென்னிந்தியகோஷ்டியில் அடங்கியுள்ளனர்.

1966-ம் ஆண்டு ஐ. நா. வின் பொதுச்சபைக் கூட்டத்தில் கலந்து கொண்ட இலங்கை தூதுக்கோஷ்டியில் திரு. ஏ. சி. எஸ். ஹமீதும் அங்கம் வகித்திருந்தார்.

## 1300 இலங்கை குடும்பங்கள்

### தென் கன்னடத்தில் குடியமர்த்தப்படுவர்

பங்களூர், பெப். 8

இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின் கீழ் இந்தியா திரும்பவிருக்கும் இந்திய வம்சாவழியினரில் ஆயிரத்து முன்னூறு குடும்பங்கள் தென் கன்னடத்தில் குடியமர்த்தப் படவிருக்கின்றனர். இதற்கு மைசூர் அரசாங்கம் சம்மதம் தெரிவித்திருக்கிறது.

இந்திய வம்சாவழியினரில் முன்னூறு குடும்பங்கள் விரைவில் வரவிருக்கின்றன. இக்குடும்பங்கள் தென்கன்னடத்தில் சூலியா என்னுமிடத்தில் குடியமர்த்தப்படவிருக்கின்றன.

மக்களுக்கு சமீபத்தில் ரப்பர் செய்கைபண்ணப்பட்ட பகுதியில் ரப்பர் மரமொன்றில் முதல் பால் எடுக்கும் வைபவத்தை மைசூர் முதல் மந்திரி திரு. நிஜலிங்கப்பா நேற்று ஆரம்பித்து வைத்தார்.

## நெடுந்தீவில் பெற்ரேல் ஊறுகிறதா? - ஆராய்ச்சி தொடர்கிறது

நெடுந்தீவு, வியாழன்

நெடுந்தீவில் பெற்ரேல் இருக்கின்றதா என்று ஆராய வந்திருக்கும் இலங்கை பெற்ரேல் கூட்டுஸ்தாபனம் தங்கள் ஆரம்பவேலைகளை கடந்த ஒருவாரகாலமாக நடத்திவருகிறார்கள். கூட்டுஸ்தாபனத்தின் ஒரு பகுதியான அளவைப்பகுதி தங்களின் அளவை வேலைகளை நெடுந்தீவுத்துறைமுகத்தில் இருந்து மேற்குக் கடற்கரையான பெரிய துறை வரைக்கும் அளந்து முடித்துக்கொண்டு, இப்போது நெடுந்தீவின் தென் கிழக்கு மூலையான 'குயிந்தா' என்னும் கோரியில் இருந்து துறைமுகம் வரை தங்கள் அளவை வேலையை ஆரம்பித்துள்ளார்கள். இவர்களே குழிதோண்டி வெடி வைக்கும் புள்ளிகளை குறிப்பிட்டுவருகிறார்கள். இது ஒருபுறமிருக்க மண் ஆராய்ச்சிப்பகுதியான மற்றப்பகுதி தற்போது தங்கள் இயந்திரங்களைக்கொண்டு குறிப்பிட்ட புள்ளிகளில் கிடங்குகள் தோண்டி வருகிறார்கள். இவர்கள் தங்கள் வேலையை பெரியதுறையில் இருந்து ஆரம்பித்துள்ளார்கள். ஒவ்வொரு புள்ளியும் 480 மீட்டர் இடைவெளியுள்ளனவாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

தெய்வீக வழியில் செல்லுகையில் பல பல தடைகள் குறுக்கிடும். ஆனால் தெய்வசக்தியின் முன் அத்தடைகள் எதிர்நிற்க முடியாது. நமது பலவீனமும், துன்பங்களும், மன இருளும் அவ்வருட் சக்தியால் மறைந்து, புதுசக்தியும், இன்பமும், ஒளியும் நமக்கு ஏற்படுகின்றது.

— சுவாமி ராமதாஸ்


ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: EELANADU Jaffna
Post Box: 49 Jaffna
Telephone: 389.

யாழ்ப்பாணம் பிலவங்க வருஷம் தை மாதம் 26ம்திகதி [9-2-68]


## உண்மை ஜனநாயகம்

சிறுபான்மையினரின் உரிமைகள் பெரும்பான்மையினரால் மறுக்கப்பட்டால் அது ஜனநாயகமல்லவென்றும் அது சர்வாதிகாரமாகு மென்றும் பிரதமர் திரு. டட்லி சேனநாயகா கல்முனைத் தொகுதியில் தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் பேசுகையில் உண்மையான ஜனநாயகம்பற்றி சரியான விளக்கம் கொடுத்திருந்தார். இது வெறும் தேர்தல்பிரசாரப் பேச்சாகவோ, விளக்கமாகவோ இருக்க மாட்டாது: இருக்கக் கூடாது என்று விரும்புகிறோம்.

ஜனநாயகம்பற்றிப் பலரும பலவிதமாக, தமது நோக்கத்துக்கேற்ற முறையில் விளக்கம் கூறுவது இங்கு சர்வசாதாரணம். ஜனநாயகமென்றால் காலத்துக்குக் காலம் பிரதிநிதிகளைத் தெரிவு செய்வது மட்டுமல்ல என்றும் சகல மக்களின் உரிமைகளுக்கும் உத்தரவாதமளிப்பதே ஜனநாயகமென்றும் திரு. டட்லி விளக்கம் கூறியிருப்பது இலங்கையின் சமீபகால வரலாற்றில் கேள்விப்படாத விஷயம். பெரும்பான்மையினரின் உரிமைகளைப் பாதுகாப்பது மட்டுமல்ல. சிறுபான்மையினருக்கு உரிமைகள் வழங்கப்படக் கூடாதென்பதே இங்கு சிலர் ஜனநாயகத்துக்குக் கொடுத்துவந்த விளக்கம். இதன் விளைவுதான் தேசிய ஐக்கியம் சீர்குலைந்து நாடு முன்னேற முடியாது பின்தங்கிய நிலையிலிருக்கிறது. 'சிறுபான்மையினரின் வகுப்புவாதத்தைவிட பெரும்பான்மையினரின் வகுப்புவாதம் பேராபத்தானது' என்று மறைந்த மேதை பண்டித ஜவஹர்லால் நேரு கூறியதன் உண்மையையும் நாடு அனுபவத்தில் உணர்ந்தது. ஆயினும் செய்த தவறை உணர்ந்து அதைத் திருத்திக் கொள்ளும் மனப்பக்குவம் உள்ள தலைவர்கள் இங்கு மிக மிகக் குறைவு. தவறை உணர்ந்து கொண்டாலும்கூட அதைப்பற்றி வெளியே சொல்லும்துணிச்சலுள்ளவர்களும் இங்கு குறைவு. பல வருடங்களுக்குப்பின்னர் தேசிய ஐக்கியத்தின் அவசியத்தைப்பற்றியும் உண்மை ஜனநாயகத்தைப்பற்றியும் குரல் ஒலிக்கத் தொடங்கியிருக்கிறது. இலங்கைக்கு சுதந்திரம் பெற்றுத்தர உழைத்த பெரியார்களில் ஒருவரான காலஞ்சென்ற திரு. டி. எஸ். சேனநாயகா, கிடைத்த சுதந்திரத்தைப் பேணிப் பாதுகாப்பதற்கு தேசிய ஐக்கியம் அவசியம் என்பதையும் உணர்ந்திருந்தார். இதனால்தான் ஆட்சிமொழிபற்றிய குரல் 1944-ம் ஆண்டில் எழுந்தபோதே சிங்களத்துக்கும் தமிழுக்கும் சம அந்தஸ்துக் கொடுத்து அது ஒரு பிரச்னையாகாமல் தடுத்ததுடன் தேசிய ஐக்கியத்தையும் நிலைநாட்டி நாட்டுக்கு விடுதலை கிடைக்கச் செய்தார். ஜனநாயகத்தின் உண்மை அர்த்தத்தை அவர் தெரிந்திருந்தார்; அதைச் செயல்படுத்தும் துணிவும் அவரிடமிருந்தது.

நமது நாட்டுக்கு இன்று வேண்டியதும் இதுவே. பிரதமர் திரு. டட்லி சேனநாயகா தேசியஐக்கியத்தின் அவசியத்தை மட்டுமல்ல ஜனநாயகத்தின் உண்மை விளக்கத்தையும் துணிச்சலுடன் எடுத்துக் கூறுகிறார். இந்தத் துணிவு தேர்தல் பிரசாரத்துடன் நின்றுவிடாமல், இதுவரை செய்த தவறுகளை நீக்கி செயலில் நிறைவேற்றக் கூடியதாக இருக்க வேண்டும்.

# கூட்டுறவு இயக்கத்தின் தன்னலமற்ற சேவையாளன்

## அவரின் பிரிவு பெரும் இழப்பு



ஈழத்து கூட்டுறவு இயக்கம் தன்னலமற்ற ஒரு சேவையாளனை இழந்துவிட்டது. தன் வாழ்வையே கூட்டுறவு இயக்கத்துக்கு அர்ப்பணித்து, செயற்கரிய பல செய்த அவரின் பிரிவு கூட்டுறவு இயக்கத்தைச் சேர்ந்தவர்களையும், அதன் மீது பற்றுக்கொண்டவர்களையும் மீளாத் துயரத்தில் மூழ்க வைத்துவிட்டது.

வழக்கமாக தனது கருமங்களை சுறுசுறுப்பாகவே ஆற்றிக்கொண்டிருந்த கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு. முருகேசு மதிபாலசிங்கம் நேற்றுக்காலை திடீர் மாரடைப்பினால் காலமாகிவிட்டார் என்றால், அந்தச்செய்தியை எப்படித்தான் தாங்கிக்கொள்ளமுடியும்?

இருபத்திமூன்று ஆண்டுகளுக்கு முன்னர் கூட்டுறவுப் பாசறைக்குள் நுழைந்த திரு. மதிபாலசிங்கம், கூட்டுறவு இயக்கத்துக்குள் இருந்துகொண்டு மக்களுக்கு ஆற்றிய பணி ஒவ்வொன்றையும் பிரித்துப்பிரித்துச் சொல்லவே முடியாது!

அரசாங்க லிகிதர் சேவையில் இருந்த திரு. மதிபாலசிங்கம் 1944-ம் ஆண்டு கூட்டுறவு இன்ஸ்பெக்டராக பதவியேற்றார். அப்பொழுது தான் அவர் பட்டதாரி பரீட்சையில் [பொருளாதாரம்] சித்திபெற்றார். பின்னர் பொல்கொல்ல பயிற்சிக் கலாசாலையில் விரிவுரையாளராக நியமனம் பெற்றார். பயிற்சிக்கலாசாலையில் இவரிடம் பயின்ற மாணவர்கள் கூட்டுறவு இயக்க சேவையில் இன்று முன்னின்று ஆற்றுகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. வெளிநாட்டு கூட்டுறவு நிபுணர்கள் இலங்கைக்கு விஜயம்செய்த போது, திரு. மதிபாலசிங்கத்தின் சேவையை அப்போது பெரிதாகப் பாராட்டினார்கள்.

திரு.மதிபாலசிங்கம் திரு. கோணமலைகூட்டுறவு இயக்க உதவி ஆணையாளராக பின்னர் நியமனம் பெற்றார். இதன் பின்னர் யாழ்ப்பாணம் கிழக்கு கூட்டுறவு உதவிஆணையாளராகப்பதவி யேற்றார். இவ்வாண்டுதான் அவர் வவுனியாவுக்கு கூட்டுறவு உதவி ஆணையாளராக இடமாற்றஞ்செய்யப்பட்டார்.

கூட்டுறவு இயக்கத்தைப் பற்றி தெளிவான பல நல்ல கருத்துக்களை மனதில் கொண்டு சேவையாற்றியவர், திரு. மதிபாலசிங்கம்.

கூட்டுறவுஇயக்கத்துக்குள் அரசியல் கலப்பு இல்லாமல் மக்களுக்கு சுயநலமில்லாத சேவையாற்றுவதையே தனது குறிக்கோளாகக் கொண்டிருந்தவர், திரு.மதிபாலசிங்கம்.

கூட்டுறவு இயக்கத்தின் மூலம் நாட்டுக்கு நல்ல சேவையாற்றமுடியும் என்ற திரு. மதிபாலசிங்கத்தின் நம்பிக்கையை செயலில் காட்டுவதே அவருக்கு நாம் செய்யும் நினைவு அஞ்சலியாகும்.

-பாமா

## நாடகப்போட்டி

சுழிபுரம், புதன்

வட இலங்கை கிராமியக் கலைக்கழகக்கூட்டம் சங்க உபதலைவர் வித்துவான் பொ. ஜெகநாதன் தலைமையில் நடைபெற்றபோது புதுவருவருட வேலைத்திட்டங்கள் ஆராயப்பட்டன. வரும் சித்திரை மாதத்தில் நாடகவிழாவையும், ஆவணி மாதத்தில் நடன அரங்கேற்றத்தையும், மார்கழி மாதத்தில் இசைவிழாவையும் நடாத்துவதாக முடிவுசெய்யப்பட்டது. நாடகவிழாவையொட்டி வடஇலங்கையிலுள்ள நாடக மன்றங்களிடையே ஒரு போட்டியை நடாத்தி பரிசில்கள் வழங்குவதென முடிவுசெய்யப்பட்டது.

## இன்றைய பலன்

**[9-2-68]**

**வெள்ளிக்கிழமை**

[தை மீ 26 உ]

திதி: தசமி பகல் 10-53 மேல் ஏகாதசி.

நட்சத்திரம்: மிருகசீரிடம்.

ராகுகாலம்: 11-05—12-35.

சுபநேரம்: 6-35—8-05

இன்று பிறந்தவர்களுக்கு- காதல் சிட்டுக்களுக்கு இவ்வாண்டு 'லட்டு'ப்போல இனிக்கும். புதுப்பொருள் வரவும். பூமி இலாபமுண்டு. ஆடம்பரச் செலவுகள் இடம் பெறும். வாகன மோட்டுபவர்கள் நிதானத்துடன் இருக்கவும். பொறுமைப் பார்வை இருப்பினும், முன்னேற்றத்தில் முட்டுக்கட்டை ஏற்பட முடியாது. உடல் நலத்தைப் பேணவும்.

மேஷம்- பொருளாதார முன்னேற்றம், புகழுமுண்டு.

ரிஷபம்- தொழில் கவலை, தொல்லைகள் பெருகும்.

மிதுனம்- அடிசறுக்கும், ஆணவத்தை அடக்கு.

கடகம்- வார்த்தை ஜாலம், வசீகரப்பார்வை.

சிம்மம்- தடைகள் தாக்கும், தாமதமிகுதி.

கன்னி- அன்னையின் ஆசி, ஆனைத்திலும் வெற்றி.

துலாம்- புத்திரர் புகழ், புதிய உற்சாகம்.

விருச்சிகம்-ஆயுதபயம், அவசரம் வேண்டாம்.

தனுசு- இல்லறம் இனிக்கும், இணைப்பும் இறுகும்.

மகரம்- நண்பரால் துன்பம், நஷ்டமுண்டு.

கும்பம்- பாக்கிய விருத்தி, பந்துக்கள் உறவு.

மீனம்- மேலிடத்து ஆதரவு. துரித முன்னேற்றம்.

— சோதிடக்கலாநிதி —
திருமலை வேலுப்பிள்ளை

## பாடப்பகுதி தலைவர்கள்

புன்னாலைக்கட்டுவன், வியா.

பாடசாலைகளில் தற்காலிகமாக நியமிக்கப்பட்டுள்ள பாடப்பகுதித் தலைவர்களின் பதவிகள் விரைவில் போட்டிப் பரீட்சை நேர்முகப் பரீட்சைகளின் பின்னர் கசற் அறிவித்தலின்படியே நிரப்பப்படுமென்றும் இவ்வாசிரியருக்கு விசேட சம்பளத் திட்டம் ஒன்று விரைவில் உருவாக்கப்படுமென்றும் தெரிகிறது. இப்போட்டிப் பரீட்சையில் பல ஆசிரியர் தோற்றுவரென எதிர்பார்க்கப்படுகிறது.

## ஆனையிறவில் நீரியல் ஆராய்ச்சி

புன்னாலைக்கட்டுவன், வியா.

தற்பொழுது வல்லை, தொண்டமானாறு, குடத்தனை ஆகிய பகுதிகளில் நடைபெறும் ஆராய்ச்சிகளைத் தொடர்ந்து ஆனையிறவிலும் நடத்த வடமாகாண விஞ்ஞான ஆசிரியர் சங்கம் திட்டமிட்டுள்ளது. ஏறக்குறைய 20 பாடசாலைகள் பங்குபற்றும் இவ்வித நீரியல் ஆராய்ச்சிகளின் நல்விளைவுகளை விரைவில் காணக்கூடியதாயிருக்குமென்று மேற்படி சங்கச் செயலாளர் திரு. வீ. சுந்தரலிங்கம் கூறுகிறார். ஆனையிறவு நீரியல் ஆராய்ச்சியில் மாணவிகளும் கலந்து கொள்வார்களெனத் தெரிகிறது.

## நாட்டிலும் நகரிலும்

இலங்கையின் தேசிய தலைவர்களுள் ஒருவரான பொன்னம்பலம் சகோதரர்கள், சேர் ஜேம்ஸ் பீரிஸ், ஈ. டபிள்யூ. பெரேரா, டி. எஸ். சேனநாயகா ஆகியோரின் சகபாடியாகக் கருதப்படும் சேர் பாரன் ஜெயதிலகாவின் நூறுவது பிறந்தின விழா தென்னிலங்கையில் நேற்று முதல் ஒரு வாரங்களுக்குக் கொண்டாடப்படுகிறது.

1915-ம் ஆண்டு நடந்த சிங்கள-முஸ்லிம் கலவரங்களில் சேனநாயகாவுடன் ஜெயதிலகாவும் சிறைத் தண்டனை அனுபவித்தவர். பின்பு டொனமூர் அரசியல் திட்டத்தின்கீழ் அமைக்கப்பட்ட அரசாங்க சபையில் அவர் பல காலம் களனி பிரதிநிதியாகக் கடமையாற்றினார்.

எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயகா அப்பொழுது தான் ஒக்ஸ்போர்ட்டிலிருந்துதிரும்பிவந்தகாலம். காலசடைகள் சப்பாத்துகளைக் கழற்றிவிட்டு வேட்டி சால்வையுடன் சமதர்மதூற்போக்குக் கருத்துக்களையும் பூண்டு சபைக்கு வந்திருந்தார் வியாங்கொடை பிரதிநிதியாக. தேசியமும் சோஷலிஸமும் அவருடைய இளம் உள்ளத்தில் முகிழ்த்தெழுந்து கொண்டிருந்தது ஏழை செல்வர் பாகுபாடுகளைப் பற்றி காரசாரமாக உணர்ச்சியுடன் பேசுவார்.

ஒரு நாள் அரசாங்கசபை விவாதமொன்றில் திரு. பண்டாரநாயகா மிகவும் உணர்ச்சிவசப்பட்டவராய் தமது பிரசங்கத்திறனை உலகுக்குஎடுத்துக்காட்டவேண்டுமென்ற நோக்கத்துடன், விளாசிக்கொளுத்தினார்.

கிராமங்களில் வாழும் ஏழைப் பொதுமக்கள் ஆத்திரமடைந்தார்களானால் அவர்கள் கொழும்புக்குப் படையெடுத்துவந்து இந்த அரசாங்கசபைகட்டடத்தை தூண் தூணாக, சுவர் சுவராக சலாசலாகையாக உடைத்தெறிந்து சின்னபின்னப்படுத்தி தங்கள் வஞ்சத்தைத் தீர்த்துக்கொள்வார்களென்று பண்டாரநாயகா முரசொலி கொட்டினார்.

இந்த இடி முழக்கத்தை முகத்தில் ஈயாடாமல் கேட்டுக் கொண்டிருந்த சேர் பாரன் சாவகாசமாக எழுந்துசொன்னார்.

வெயாங்கொடை பிரதிநிதியவர்கள் சொன்னதை நான்முற்றிலும் ஆமோதிக்கிறேன். ஆனால் அவர் கூறியதுபோல மேற்படி பொது மக்கள் கிராமங்களிலிருந்து கொழும்புக்கு படையெடுத்து வருங்காலையில் வழியிலே ஹோரகொல்லை தோட்டத்தையும் பார்ப்பார்கள். அங்கே பலவிதமான வன விலங்குகளும் பறவைகளும் ராஜபோகத்துடன் வாழ்வதைக் காண்பார்கள். உணவில்லாமல் நாங்கள் திண்டாட இங்கே மிருகங்களையும் பட்சிகளையும் நன்றாக உணவூட்டி வளர்க்கின்றார்களே என்று கோபித்தெழுவார்கள், ஹோரகொல்ல தோட்டத்தை முதலில் சின்னபின்னப் படுத்திவிட்டுத்தான் பின்பு கொழும்புக்கு வருவார்கள், என்றார் சேர். பாரன்.

திரு. பண்டாரநாயகாவின் தகப்பனார் சேர். செல்மன் டயஸ்பண்டாரநாயகா ஒரு செல்வச்சீமான். அவர் வாழ்ந்த ஹோரகொல்ல தோட்டம் ஒரு சிறு ஜமீன். சேர். சொலமன் அதில் ஓர் சிற்றரசர்போல ராஜபோக படாடோபங்களுடன் சுக ஜீவனம் நடத்தி வந்தார்.

[6-ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# அமெரிக்க ராணுவ விசேஷ நிலையம் வீழ்ச்சி; பிரதானதளத்துக்கும் ஆபத்து; போர்நீடிப்பு

## வடக்கு வியட்நாம் படைகள் முன்னேற்றம்

### 20 லட்சம் தென் வியட்நாமியர் வீடு வாசல் இழந்து அகதிகளாயினர்

லண்டன், பெப் 8

தென்வியட்னாமில் அமெரிக்க விசேஷ இராணுவ நிலையம் வடவியட்னாம் படைகளிடம் வீழ்ச்சியடைந்துவிட்டது. இந்த நிலையத்தை பாதுகாப்பதற்காக கடைசிவரை போராடிய அமெரிக்க தென்வியட்னாமிய துருப்புக்களில் பலர் மாண்டனர். மற்றும் பலர் பலத்த காயமடைந்தனர். எஞ்சிய சிலர் அமெரிக்காவின் பிரதானமான கெயிஸாங் தளத்துக்கு தப்பிச் சென்றனர். தகவல்கள் சேகரிப்பதற்கும் ஊடுருவல்களை தடுப்பதற்கும் அமெரிக்கர் உபயோகித்துவந்த லாங்வே என்ற இந்த இராணுவநிலையம் வடவியட்னாமியர் வசம் சேர்ந்து விட்டதால் வியட்னாமில் அமெரிக்காவின் பிரதான தளமான கெயிஸாங் தளத்துக்கும் இனி எந்நேரமும் ஆபத்து நேரலாமென கருதப்படுகிறது.

மலையுச்சிக் காவல் நிலையமான லாங்வேயில் கடும் சண்டை நீடித்து வந்தது. சோவியத் டாங்கிகளை வைத்து வடவியட்னாம்படைகள் உக்கிரமாக தாக்குதல் நடத்தின. இரண்டாயிரத்து ஐநூறு அமெரிக்கத் துருப்புக்களும் ஐயாயிரம தென்வியட்னாம் துருப்புக்களும் இறுதிவரை காவல் நிலையத்தைப் பாதுகாக்க நடத்திய போர் வெற்றியளிக்கவில்லை. காவல் நிலையத்திலிருந்து தெற்கே சிறிது தொலைவிலிருக்கும் ஐக்கிய அமெரிக்கத் தளமான கெயி-ஸாங் தளத்துக்கு 75 பேர் தப்பச்சென்றனர்.

லாங்-வே வீழ்ச்சியடைந்ததைத் தொடர்ந்து கெயி-ஸாங் தளத்துக்கு ஆபத்து ஏற்பட்டுள்ள அதேசமயம் தென்வியட்னாம் தலைநகரான சைகோனிலும் மற்றொரு நகரமான ஹியூவிலும் வியட்காங்கியர் தொடர்ந்து தாக்குதல் நடத்திவருகின்றனர்.

வியட்னாமில் சென்ற ஒன்பது தினங்களாக நடைபெற்றுவரும் சண்டையில் ஐம்பதினாயிரத்துக்கு மேற்பட்ட எதிரித் துருப்புக்களை அழித்துவிட்டதாக வடவியட்னாம் தெரிவித்துள்ளது. சைகோனில் அமெரிக்க ரடார் நிலையங்களும் சேதமடைந்துள்ளன.

## அகதிகள் பிரச்னை அதிகரிக்கிறது

தென்வியட்னாமில் வியட்காங்கியர், வடவியட்னாமியரின் தாக்குதல், தீ வைப்புச் சம்பவங்களால் தென்வியட்னாமில் மீண்டும் அகதிகள் பிரச்னை பெருமளவு அதிகரித்திருப்பதாகவும் சென்ற சில தினங்களுக்குள் இருபது லட்சம் மக்கள் வீடுவாசல்களை இழந்து அகதிகளாகியிருப்பதாகவும் தென்வியட்னாம் அரசாங்க அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். சைகோனில் மட்டும் ஒரு லட்சம் மக்கள் வீடுவாசல்களை இழந்து அகதிகளாகியுள்ளனராம்.

**வேவுக்கப்பல் விவகாரம்**

## கொரிய கடலில் ரஷ்ய போர்க் கப்பல்கள்

### அமெரிக்க யுத்தக்கப்பல்களும் தயார் நிலையிலுள்ளன

சியோல், பெப். 8

அமெரிக்க வேவுக் கப்பலான 'பியூப்லோ'வை வடகொரியர் கைப்பற்றியதைத் தொடர்ந்து கொரியாவில் தோன்றியுள்ள நிலையில் இப்போது புதிய திருப்பம் ஒன்று ஏற்பட்டுள்ளது.

கொரிய நீர்ப்பிராந்தியத்திற்குள் இப்போது சோவியத் ரஷ்யா தனது போர்க் கப்பல்கள் சிலவற்றை அனுப்பிவைத்திருக்கிறது. பத்திலிருந்து பதினைந்து வரையிலான ரஷ்ய போர்க் கப்பல்கள் கொரிய நீர்ப் பிராந்தியத்துக்குள் சென்று நிலைகொண்டிருக்கின்றனவாம்.

'பியூப்லோவை' வடகொரியா கைப்பற்றியதைத் தொடர்ந்து வடகொரிய கடற்பிரதேசத்துக்குள் சென்று முற்றுகை நிலையில் இருந்த அணு ஆயுதம் பொருத்தப்பட்ட அமெரிக்க நாசகாரிக் கப்பலான 'என்டர் பிரைஸ்' இப்போது அந்தப் பிரதேசத்துக்குள்ளிருந்து வெளியே எடுக்கப்பட்டிருக்கிறது. நெருக்கடி நிலையைத் தணிக்கும்பொருட்டு இக்கப்பல் வெளியே எடுக்கப்பட்ட போதிலும் அவசியம் ஏற்படும்போது நடவடிக்கையிலிறங்குவதற்குத் தயாராக அது வைக்கப்பட்டிருக்கிறதாம்.

இதுதவிர அணு ஆயுதங்கள் பொருத்தப்பட்ட 20 அமெரிக்க போர்க் கப்பல்கள் கொரிய கடற்பிராந்தியத்துக்குள் இப்போதும் நிலைகொண்டிருக்கின்றன என்று ஒரு செய்தி கூறுகிறது.

'பியூப்லோ' விவகாரம் சம்பந்தமா[illegible] தலைநகரான [illegible] நடைபெற்றுவரும் அந்தரங்க ஆலோசனைகளை

## இந்தியா ஆதரிக்கும்

புதுடில்லி, பெப் 8

இன ஒதுக்கல் கொள்கையைத் தொடர்ந்து கடைப்பிடித்து வரும் தென்னாபிரிக்காவை ஐ. நாவிலிருந்து வெளியேற்றுவதற்கு எடுக்கப்படும் எந்த நடவடிக்கையையும் இந்தியா ஆதரிக்குமென்று இந்திய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## சிங்கப்பூர் பார்லிமெண்டை கலைக்க பிரதமர் சிபார்சு

சிங்கப்பூர், பெப். 8

சிங்கப்பூர் பார்லிமெண்டைக் கலைத்துவிடும்படி சிங்கப்பூர் பிரதமர் லீ-குவான்-யீ சிபார்சுசெய்திருக்கிறார். பார்லிமெண்டைக் கலைக்கும் பிரகடனம் விரைவில் வெளிவருமென எதிர்பார்க்கப்படுகிறது.

பார்லிமெண்டைக் கலைக்கும்படி பிரதமர் சிபார்சு செய்ததற்கான காரணம் எதுவும் வெளியிடப்படவில்லை. ஆனால் சிங்கப்பூரிலிருந்து பிரிட்டிஷ் தளம் விலக்கப்படவிருப்பதைத் தொடர்ந்து பிரதமர் லீ-குவான்-யீ எடுக்கவிருக்கும் நடவடிக்கைகளுக்கு மக்களிடமிருந்து தெளிவான கட்டளை பெறும் நோக்கத்துடனேயே பார்லிமெண்டைக் கலைக்கும்படி அவர் சிபார்சு செய்திருக்கலாமென கருதப்படுகிறது.

சிங்கப்பூரிலிருந்தும் பாரசீக வளைகுடாவிலிருந்தும் பிரிட்டன் தனது துருப்புக்களை 1971-ம் ஆண்டில் விலக்கிக் கொள்ளவிருக்கிறது.

## சூடான் பார்லிமெண்ட் கலைக்கப்பட்டது

சூடான் பார்லிமெண்ட் கலைக்கப்பட்டுவிட்டது. முன்னர் அறிவித்தபடி இவ்வருடம் ஏப்ரல் மாதம் 28-ம் திகதி பொதுத்தேர்தல் [illegible] நடைபெறுமென்று சூடான் பிரதமர் அறிவித்திருக்கிறார்.

சூடானுக்கு நிரந்தர அரசியல் அமைப்பு வேண்டுமெனக் கோரி சூடான் தலைநகரான கார்ட்டூமில் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றதைத் தொடர்ந்தும் அரசாங்க அங்கத்தவர் பெருமளவில் ராஜினாமாசெய்ததைத் தொடர்ந்துமே பார்லிமெண்ட் கலைக்கப்பட்டது. ஆர்ப்பாட்டங்களினால் ஏற்பட்டுள்ள நிலைமையைச் சமாளிப்பதற்காக இராணுவம் தலைநகரில் நுழைந்துள்ளது. நகரின் முக்கிய பகுதிகளில் இராணுவமும் பொலிசாரும் காவல்புரிகின்றனர்.

ஆர்ப்பாட்டம் செய்தவர்களில் 200 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

**பெல்ஜிய அரசாங்கம்**

பெல்ஜியத்தில் கடந்த இரண்டு ஆண்டுகளாக ஆட்சியிலிருந்த அரசாங்கம் ராஜினாமாச்செய்திருக்கிறது. மொழிப் பிரச்னை காரணமாக ஆர்ப்பாட்டங்கள் நிகழ்ந்ததும் அதனால் ஏற்பட்டுள்ள நிலைமை காரணமாகவும் பிரதமர் தமது மந்திரிசபையின் ராஜினாமாவை [illegible] மன்னரிடம் கையளித்தார்.

**பொலிவியா**

பொலிவியாவில் புதிய மந்திரிசபையை பொலிவியா அதிபர் நேற்று நியமித்தார்.

ஆட்சேபித்து வெளியே [illegible] காயமடைந்தனர். பலர் [illegible] செய்யப்பட்டனர்.

## நடுநிலைமை நாடுகளின் உச்சிமகாநாடு தேவை

### டிட்டோ கருத்து

கெய்ரோ, பெப். 8

வியட்னாமில் இன்று தோன்றியுள்ள ஆபத்தான நிலை பற்றி ஆராய்வதற்கு, வல்லரசு முகாம்களில் சேராத நடுநிலைமை நாடுகளின் தலைவர்களைக்கொண்ட உச்சி மாநாடு நடைபெற வேண்டியது அவசியம் என்று யூகோஸ்லாவிய அதிபர் மார்ஷல் டிட்டோ கருத்துத் தெரிவித்திருக்கிறார்.

கெய்ரோவில் ஐக்கிய அரபுக் குடியரசு அதிபர் நாஸருடனும் சூடான் அதிபருடனும் பேச்சுவார்த்தை நடத்தியபின் நிருபர்களிடம் பேசுகையில் நடுநிலைமை நாடுகளின் உச்சி மகாநாடு நடைபெற வேண்டியது பற்றி மார்ஷல் டிட்டோ தெரிவித்தார்.

இந்த உச்சிமகாநாடு பரவலான அடிப்படையில் நடைபெறவேண்டுமென்றும் அவர் சொன்னார். பொருளாதார காரணங்களுக்காக ஒப்பந்தங்களில் சேர்ந்துள்ள ஆனால் நடுநிலைமைக் கொள்கையையுடைய நாடுகளும் இந்த மகாநாட்டில் கலந்துகொள்ளலாமென்று அவர் தெரிவித்தார்.

மேற்காசியா பற்றி மார்ஷல் டிட்டோ கருத்து வெளியிடுகையில் ஐ. நா விசேஷ பிரதிநிதி திரு ஜாரிங்கின் முயற்சி தோல்வியடைந்ததற்கு இஸ்ரேல் தான் காரணமென்றார். இஸ்ரேலை வழிக்குக் கொண்டுவருவதற்கு, அதை அமெரிக்கா நிர்ப்பந்தப்படுத்தவேண்டுமென்றும் அவர் சொன்னார்.

## கூப்பன் அரிசி பெறுவதில் தாமதம்

அனலைதீவு, வியாழன்

அனலைதீவு கிராமசபைப் பகுதியில் கூப்பன் அரிசியை உரிய காலத்தில் பெறமுடியாதிருப்பதாகப் பொதுமக்கள் புகார் தெரிவிக்கின்றனர். ஒவ்வொரு கிழமையும் திங்கட்கிழமைகளிலேயே கூப்பன் அரிசியை ஊர்காவற்றுறையிலிருந்து கொண்டுவருவதால் திங்கட்கிழமைகளில் நிச்சயமாக கூப்பன் அரிசியைப் பெறமுடியாதிருக்கிறதாம்.

சிலவேளைகளில் திங்கட்கிழமைகளில் போயாதினம் வந்துவிட்டால் செவ்வாய்க்கிழமை மாலை அரிசியைக் கொண்டுவந்து, புதன் கிழமையே அரிசி விநியோகம் செய்கின்றனராம். இதனால் இங்குள்ள மக்கள் மிகவும் கஷ்டமுறுகின்றனர்.

## மேற்கு ஆசிய பிரச்னைக்கு டிகோலின் சமரசயோசனை

பாரிஸ், பெப். 8

மேற்கு ஆசிய பிரச்னைக்குத் தீர்வுகாண்பதற்கான தமது ஐந்து அம்ச யோசனையை பிரெஞ்சு அதிபர் ஜெனரல் டி கோல் மீண்டும் வலியுறுத்தியிருக்கிறார்.

சென்ற ஜூன் மாதம் நடந்த சண்டையின் போது இஸ்ரேலியர்கள் கைப்பற்றிக்கொண்ட அரபு பிரதேசங்களிலிருந்து இஸ்ரேலியர் விலகிக்கொள்ளவேண்டும் அகதிகள் பரிமாற்றம், சூயஸ் கால்வாயில் சகலருக்கும் சுதந்திரமான போக்குவரத்து உரிமை, இஸ்ரேலியருக்கும் அரபுநாடுகளுக்குமிடையில் சமாதானப் பேச்சுவார்த்தைகள் மூலம் நட்புறவை வளர்த்துக் கொள்வது ஆகியவைகளே ஜெனரல் டிகோல் தெரிவித்துள்ள யோசனைகள்.

பாரிசுக்கு விஜயம் செய்திருக்கும் ஈராக் அதிபருக்கு அளித்தவிருந்துபசாரத்தில் பிரெஞ்சு அதிபர் தமது யோசனைகளை மீண்டும் வலியுறுத்தினார்.

## அமெரிக்க அதிபருடன் பிரி. பிரதமர் ஆலோசனை

வாஷிங்டன், பெப். 8

பிரிட்டிஷ் பிரதமர் திரு. வில்ஸன் வாஷிங்டன் வந்துள்ளார். அமெரிக்க அதிபர் திரு. ஜோன்சனுடன் அவர் நடத்தவிருக்கும் பேச்சுவார்த்தைகளில் வியட்நாம் பிரச்னை முக்கிய இடம் பெறும் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

மாஸ்கோவில் சோவிய[illegible]

(4-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆழ்கடலில் அலைகளுடன் போராடி நீச்சலடித்த வீரர்கள்

## நெடுந்தீவில் மக்களைக் கவர்ந்த போட்டி முடிவுகள்

— நமது நிருபர் திருமதி எப். புஷ்பராணி —

நெடுந்தீவு, வியாழன்

நெடுந்தீவில் சுதந்திரதின விழா காலை 7 மணிக்கு தேவாலயங்களின் மணி ஓசைகளுடனும் ஆராதனைகளுடனும் ஆரம்பமாகியது. இவ்விழா தொடர்ந்து இரவு 8 மணிவரை நடைபெற்றது. காலை 9 மணிக்கு மாணவர்களின் அணிவகுப்பும் கொடியேற்று வைபவமும் பெருந்திரளான ஜனத்திரளின் மத்தியில் நடைபெற்றது. அணிவகுப்பு மரியாதையை நெடுந்தீவு காரியாதிகாரி திரு. த. வேல்தம்பி ஏற்றுக்கொண்டார். இதைத்தொடர்ந்து நெடுந்தீவு மகாவித்தியாலய மாணவர்களின் தேசியகீதம் ஒலிக்க காரியாதிகாரி திரு. த. வேல்நம்பி கொடியேற்றி வைத்தார். விளையாட்டுப்பகுதியின் முதல் நிகழ்ச்சியாக குதிரை ஓட்டம் இடம்பெற்றது. சிலுவைதுறை என்னும் இடத்தில் ஆரம்பித்த இப்போட்டி வீதிவழியே சென்று காரியாதிகாரி கந்தோரில் முடிவடைந்தது. இப்போட்டி மிகவும் கவர்ச்சியாக இருந்தது. குதிரைகளும் கடும்போட்டிபோட்டன. முதலாம் இடத்தை சுப்பிரமணியம் வைத்திலிங்கமும் இரண்டாம் இடத்தை ஏகாம்பரம் பரராசசிங்கமும் மூன்றாம் இடத்தை குமாரவேலு கணேசலிங்கமும் தட்டிக்கொண்டனர். தொடர்ந்து நெடுந்தீவு மேற்கு பிள்ளையார் கோவில் வீதியில் ஆரம்பித்த 5 மைல் சைக்கிள் ஓட்டப்போட்டி நெடுந்தீவு கிழக்கு அர்ச் சவேரியார் கோவிலின் வாசலுடன் முடிவடைந்தது. இப்போட்டி நெடுந்தீவின் பிரதான வீதிவழியாக நடைபெற்றதால் பொதுமக்கள் வீதி ஓரங்களில் நின்று இப்போட்டியை கண்டு களித்தார்கள். இதில் முதலாம் இடத்தை திரு. சு. ஞானப்பிரகாசமும் இரண்டாம் இடத்தை திரு. கா. தம்பிராசாவும் மூன்றாம் இடத்தை திரு. இ. அருமநாயகமும் பெற்றுக்கொண்டார்கள். தொடர்ந்து 5 மைல் ஓட்டம் நடைபெற்றது. இப்போட்டி நெடுந்தீவு மேற்கு பெரிய துறையில் இருந்து ஆரம்பித்து காரியாதிகாரி கந்தோரில் முடிவடைந்தது. இப்போட்டியும் பிரதான வீதிவழியாகவே நடைபெற்றது. இப்போட்டியில் முதலாம் இடத்தை திரு. ப. கயிலாசநாதனும் இரண்டாம் இடத்தை திரு. த. நடராசாவும் மூன்றாம் இடத்தை செல்வன் ப. தர்மபாலசிங்கமும் பெற்றார்கள். காலை நிகழ்ச்சியின் இறுதிப் போட்டியான நீச்சல் போட்டியை பெருந்திரளான மக்கள் கூடி கண்டு களித்தார்கள். நெடுந்தீவு துறைமுகத்திலிருந்து 1 மைல் தூரத்துக்கு இயந்திரப் படகில் நீச்சல் வீரர்களை ஏற்றிச்சென்று அங்கிருந்து கரையை நோக்கி நீச்சல் ஆரம்பித்தது. கொந்தளித்த ஆழ்கடலின் அலைகளைச் சமாளித்துக்கொண்டு வெற்றிகரமாகக் கரைவந்து சேர்ந்தார்கள். கடும் நீரோட்டத்தாலும் அலைகளாலும் எல்லா வீரர்களும் திசைமாறி கிழக்குப் பக்கமாகச் சென்று பின்மீண்டும் இவற்றோடு போராடி குறிப்பிட்ட முடிவிடமான துறைமுகப்பாலத்தை வந்தடைந்தார்கள். இப்போட்டியில் முதலாம் இடத்தை திரு. தே. யேசுதாசும் இரண்டாம் இடத்தை திரு அ. எமிலியானுஸ்பிள்ளையும் மூன்றாம் இடத்தை திரு. ம. யாக்கோப்பும் பெற்றார்கள்.

மாலை நிகழ்ச்சிகளில் கயிறு இழுத்தல் போட்டி மிகவும் கவரக்கூடியதாக இருந்தது. இப்போட்டி கிராமசேவையாளர்களின் பிரிவுகளுக்கிடையே நடைபெற்றது. தொடர்ந்து நடைபெற்ற பொதுக் கூட்டத்துக்கு தலைமை வகித்து நெடுந்தீவு காரியாதிகாரி திரு. த. வேல்நம்பி பேசினார்.

வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளும், பத்திரங்களும் திருமதி த. வேல்நம்பியினால் வழங்கப்பட்டன.

# செய்தித் திரட்டு

செக்கோஸ்லாவேக்கியாவைச் சேர்ந்த கீழைத்தேய மொழிகள் பலவற்றில் அறிஞரான திரு. ஜான்பிலிப்ஸ்கி இலங்கை வந்துள்ளார். சென்னையில் நடந்த அனைத்துலகத் தமிழாராய்ச்சி மகாநாட்டில் இவர் கலந்துகொண்டிருந்தார். இப்போது இவர் உள்ளூராட்சி அமைச்சர் திரு. எம். திருச்செல்வத்தின் விருந்தினராக இங்கு தங்கியுள்ளார். இவர் தற்போது சிங்களம்பயின்று வருகிறார். இலங்கையைப் பற்றி அறிந்துகொள்ள விருப்பம் கொண்டுள்ளார்.

### கமிஷன் சிபார்சு

தனியார் கம்பனிகள் (லிமிட்டெட் கம்பனிகள்) இனிமேல் தமது கணக்குகளை கம்பனிகள் பதிவாளர் முன்னர் சமர்ப்பிக்கும்படி கட்டாயப்படுத்தப்படுவரெனத் தெரிகிறது.

கம்பனிகள் சட்டத்தைத் திருத்துவதுபற்றி நியமிக்கப்பட்ட கமிஷன் செய்துள்ள சிபார்சுகளில் இதுவும் ஒன்றாகும்.

### மனநோயாளர் வழங்கிய பிரசாதம்

பருத்தித்துறையிலுள்ள மந்திகை ஆஸ்பத்திரியிலுள்ள மனநோயாளருக்காக ஸ்தாபிக்கப்பட்ட பிள்ளையார் கோவிலின் வருடாந்த அபிஷேகத்தின் போது, மனநோயாளர்களே அங்கு வந்திருந்தவர்களுக்கு பிரசாதம் வழங்கினர். டாக்டர்கள் அருளம்பலமும், பொன்னுச்சாமியும் பூசைக்கான ஒழுங்குகளைச் செய்திருந்தனர்.

### இவர்களுக்கு அதிக சம்பளம்

மலேரியா தடுப்பு இயக்கத்தின் 750ஊழியர்களுக்கு வெகுவிரைவில் கூடுதலான சம்பளம் வழங்கப்படவுள்ளது.

இந்தத் தகவலை உதவி நிதி அமைச்சர் திரு. என். விமலசேன வெளியிட்டுள்ளார். மலேரியா தடுப்பு இயக்கத்தின் கூட்டுத்தொழிற்சங்க சம்மேளனத்திடம் உதவிமந்திரி இதனைத் தெரிவித்தார்.

விஸ்வமடுகுளத்திட்டத்தில்

## 50 வாலிபர் மேலும் குடியேற்றப்படுவர்

யாழ்ப்பாணம், வெள்ளி

கிளிநொச்சி விஸ்வமடுக்குளம் குடியேற்றத் திட்டத்தில் மேலும் 50 வாலிபர்கள் குடியேற்றப் படவிருக்கிறார்கள்.

உப உணவு உற்பத்தியை அதிகரிக்கும் இத் திட்டத்தின் கீழ் மேலும் குடியேற்றப்படும் 50 வாலிபர்கள் இம்மாத இறுதியில் அங்கு குடியேற்றப்பட விருக்கிறார்கள். இத் திட்டத்தில் ஏற்கனவேயே 100 வாலிபர்கள் குடியேற்றப் பட்டுள்ளார்கள்.

இத் திட்டத்துக்கான ஒழுங்குகளைக் காணி அபிவிருத்தி அதிகாரி திரு எஸ். ஜெகநாதன் மேற்கொண்டுள்ளார்.

(கா. நி.)

### அமெரிக்க.........

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

தலைவர்களுடன் தாம் நடத்திய பேச்சு வார்த்தைகளைப் பற்றியும் திரு. வில்சன் அமெரிக்க அதிபரிடம் எடுத்துக் கூறுவாரெனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

சிங்கப்பூரிலிருந்து பாரசீக வளைகுடாவிலிருந்தும் பிரிட்டிஷ் துருப்புகள் விலக்கப்படுவது பற்றியும் பேச்சு வார்த்தை நடைபெறுமென்றும் நம்பப்படுகிறது.

வாஷிங்டனிலிருந்து திரு. வில்சன், நியுயோர்க்குக்கும் ஒட்டாவாவிற்கும் செல்வார்.

## வானொலி நிகழ்ச்சிகள்

### வெள்ளி 9-2-68

### இலங்கை

செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00.

344 மீற்றர் & 61 மீற்றர்

காலை 6-30 நாதாஞ்சலி 6-35 சைவநற்சிந்தனை. 6 40 இஸ்லாமியநற்சிந்தனை. 6-45 துதிப்பாடல்கள், 7 25 தினக்குறிப்பு 7-30 பண்ணுரிந் தமிழ் -முத்துலட்சுமி குழந்தைவேலு 8-00 இசைவேளை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்

344 மீற்றர் & 49 மீற்றர்

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 மாணவர் மன்றம்.

344 மீற்றர் & 61 மீற்றர்

இரவு 6-15 பஜனை, 6-45 பாவனம், 7-00 கிராமசஞ்சிகை. 7-30 குங்குமம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 பாட்டு— வி. செல்லத்துரை, 10-00 நேயர் விருப்பம்.

### சென்னை 1

காலை 6-00 மங்களஇசை, 6-05 துதிப் பாடல்கள், 6-30 நிகழ்ச்சிக் குறிப்புகள் 6-35 அருள் வாக்கு. 6-45 நாதஸ்வரம், 7-15 தமிழ்ச் செய்தி 7-30 காந்தி அஞ்சலி 8-00 பாட்டு 8-45 திரைகானம், 9-15 பாட்டு. 9 45 வாத்திய இசை, 10-00 நாதஸ்வரம், 10-30 மதுர கீதம்.

பகல் 11-55 பிராந்தியச் செய்திகள், 12-00 தொழிலாளர்களுக்கு. 12-30 கல்வி ஒலிபரப்பு 1-00 [illegible] நிகழ்ச்சி, 1-30 [illegible], 1-45 திரைகானம், 2-00 தமிழில் செய்தி. 2-10 கல்வி ஒலிபரப்பு.

மாலை 5-30 பாடப்பயிற்சி, 5-45 மெல்லிசை.

இரவு 6-05 பிராந்தியச் செய்திகள், 6-15 நிகழ்ச்சிக் குறிப்புகள் 6-30 வாத்திய இசை, 6-45 நேயர்விருப்பம், 7-15 தமிழில் செய்தி, 7-30 நம் விவசாயிகளுக்கு, 8-00 நாடகம்—பழரசம், 8-30 மாதம் ஒரு மலர், 8-35 மெல்லிசை. 8-45 சித்திரம்—ஏர்முனை, 9-15 பாட்டு — எம். எம். தண்டபாணி தேசிகர்,

### திருச்சி 1

காலை 6-30 மங்களஇசை, 6 45 நிகழ்ச்சிக்குறிப்புகள், 6-50 பக்திப்பாடல், 6-55 அறவுரை, 7-00 துதிப் பாடல்கள், 7-15 தமிழில் செய்தி. 7-30 காந்தி அஞ்சலி, 8-15 நாதஸ்வரம்.

பகல் 11-55 பிராந்தியச் செய்திகள், 12-00 தொழிலாளர்களுக்கு 1-00 மாதர் நிகழ்ச்சி 1-50 இசைமஞ்சரி, 2-00 தமிழில்செய்தி.

மாலை 5-30 நாதஸ்வரம்

இரவு 6-05 பிராந்தியச் செய்திகள், 6-15 மாதர் அரங்கம், 6-45 இசைப் பயிற்சி, 7-00 திரைப்பட இசை, 7-15 தமிழில் செய்தி, 7-30 நம் விவசாயிகளுக்கு 8-00 நாடகம் - பழரசம், 8-30 திரைப்பட இசை, 9-15 பாட்டு - எம். எம். தண்டபாணி தேசிகர்.


BAYER

விவசாயிகளுக்கு

பொலிடோல் E 605

பொலிடோல் - "எம்"

( சர்வபூச்சி நாசினி )

மெற்றசிஸ்டொக்ஸ் — மிளகாய் குமன் நோய் அழிக்கும்.

பொலித்தியோன் - மரக்கறி பூச்சிகளை அழிக்கும்.

லெபேசிட் —புடோல் வகை பழஈ அழிக்கும்.

மட்டாசில் —எல்லாப் புழுக்களை அழிக்கும்.

அன்றக்கோல் —உருளைக்கிழங்கு வாடல் கட்டுப்படுத்தும்.

குப்ரவிற் —செம்பு பங்கசு கொல்லி.

டக்தல் —வெங்காய களை கொல்லி.

தற்பொழுது பெற்றுக்கொள்ளக் கூடிய இடங்கள்:

"புறோவின்ஷல் டிஸ்றிபியூட்டாஸ்"

ஓட்டோஸ் கட்டிடம்

யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 244 & 628

வடபகுதி விவசாய உற்பத்தியாளர் கூட்டுறவுச் சமாசம்

111, பிரதான வீதி,

யாழ்ப்பாணம்.

தொலைபேசி: "504"



தேவை

மரவள்ளிக் கிழங்கு

மரவள்ளித் தோட்டக்காரரிடமிருந்து ஒரு நாளில் 500 முதல் 1000 ருத்தல்வரை வாங்கப்படும்.

ஸ்ரீ லங்கா ரப்பியோகா புறடக்ஸ்

தொடர்பு கொள்ளுங்கள்:

ஆர். சின்னத்தம்பி

2-ம் வட்டாரம்

முள்ளியவளை

அல்லது

சுந்தரம் பிறதர்ஸ்

73, மின்சாரநிலைய வீதி — யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### தேவை

**விற்பனையாளர்**
நெல்லிரசம் விற்பனை செய்வதற்கு பெண்கள் தேவை. நாளொன்றுக்கு பத்து ரூபாய் வரை சம்பாதிக்கலாம். முதிர்ந்த அனுபவமுள்ள வான் சேல்ஸ்மன் ஒருவர் தேவை. 500 ரூபாய் ரொக்கப் பிணை கட்டக்கூடியவர் மாத்திரம் நேரிலோ, கடிதமூலமோ தொடர்பு கொள்க. சேரா குடிசைக்கைத்தொழில் நிலையம், 5, முருகேசு லேன், நல்லூர், யாழ்ப்பாணம். 1889

**டைப்ரைட்டர்**
பயிற்சியாளரின் உபயோகத்துக்கு பாவித்த ஆங்கில, சிங்கள, தமிழ் டைப்ரைட்டர்கள் தேவை. வேலுப்பிள்ளை வர்த்தகக் கல்லூரி, (1924-ல் ஸ்தாபிக்கப்பட்டது) பருத்தித்துறை. 1888

### விற்பனைக்கு

**காணி**
சுண்டிக்குளி, குருசேவ் வீதியில் 1/222-ம் இலக்கக் காணியும், நவீன வீடும் சகல வசதிகளுடன் விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு: க. தியாகராசா, 3, பொன்னம்பலம் றோட், அரியாலை, யாழ்ப்பாணம். 1892

**மெக்கானிக் பாடங்கள்**
மார்ச் [பங்குனி] மாதம் முதல் ஆரம்பமாகும் நான்காவது மோட்டார், டிரக்டர், டீசல் மெக்கானிக் பாடங்களும் பயிற்சியும் விவேக சாதிப் பயிற்சிகளும் நவீன முறையில் போதிக்கப்படும். விபரங்களுக்கு உடன் விண்ணப்பிக்கவும். அன்றி நேரில் தொடர்பு கொள்ளவும். அதிபர், ஸ்ரீராஜ் ஓட்டோமொபையில் எஞ்ஜினியரிங் நிறுவனம், மொம்சாக் மாளிகை, மேல்மாடி, 11/B, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 2093

### கல்வி

இலங்கையில் தமிழ் சுருக்கெழுத்தை ஆரம்பித்தவரும், ஆங்கில சுருக்கெழுத்தை 46 வருடங்களாகக் கற்பித்தவருமான வேலுப்பிள்ளை இரு சுருக்கெழுத்தையும் மிக இலகுவான முறையில் கற்பிக்கின்றார். தற்போது ஐம்பது மாணவர்களுக்கு மேல் படிக்கிறார்கள். இலங்கையில் தமிழ் ஆங்கிலசுருக்கெழுத்தாளர், தட்டச்சாளராகக் கடமையாற்றுபவர்களில் கூடுதலானோர் இக்கல்லூரியில் பயின்றவர்களாகும். பார்வையிட்டு உடன்சேர்ந்து படிக்கவும். வர்த்தகக் கல்லூரி, பருத்தித்துறை. [1924-ல் ஸ்தாபிக்கப்பட்டது] 1887

**நுண்கலை**
வாய்ப்பாட்டு, வயலின், மிருதங்கம், பரதநாட்டியம் ஆகிய வகுப்புகள் நடைபெறுகின்றன. சென்னை அடையாறு கலாக்ஷேத்திரத்தில் பயிற்சிபெற்ற ஆசிரியையால் பரதநாட்டியம் கலைநுணுக்கத்துடன் கற்பிக்கப்படுகின்றது. விபரங்கட்கு உடன் எழுதவும். பதிவாளர், உயர்கலைக் கல்லூரி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். 1890

**வகுப்புகள்**
பிரவேச பண்டித, பால பண்டித, பண்டித வகுப்புகள் திறமையான ஆசிரியர்களால் நடத்தப்பெறுகின்றன. விபரங்கட்கு உடன் எழுதவும். பதிவாளர், உயர்கலைக் கல்லூரி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். 1891

**நியூ காலிங்கன்**
(இணுவில்)
தினசரி 6-30, 10-00 மணி
விடுமுறைதினங்களில் 2-30
ஆனந்தன்—அசோகன்
நடித்த
**விஜயபுரி வீரன்**


# விறுவிறுப்பாக நடந்த ஹாட்லி-சென்.ஜோன்ஸ்கிரிக்கெட் மோதல்

## ஆனால் வெற்றி தோல்வியில்லை

யாழ்ப்பாணம், வெள்ளி

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரிக்கும் யாழ்ப்பாணம் சென் ஜோன்ஸ் கல்லூரிக்கும் இடையே நடைபெற்ற கிரிக்கெட் போட்டி பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மைதானத்தில் தொடர்ந்து இருநாட்கள் நடைபெற்றது. இக் கிரிக்கெட் மோதலில் இரு கோஷ்டிகளும் சமபலத்துடன்மோதியதால் ஆட்டம் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

முதல் இனிங்ஸ் ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய ஹாட்லிக் கல்லூரி சகல விக்கெட்டுகளையும் இழந்து மொத்தம் 121ஓட்டங்களைப் பெற்றது. இதில் சொர்ணலிங்கம் 17 ஓட்டங்களும் கே. தவகுமார் 17 ஓட்டங்களும், செல்வானந்தராசா 19 ஓட்டங்களும், டி. கே. பௌல் 28 ஓட்டங்களும். ஸ்ரீதரன் 10 ஓட்டங்களும், எஸ். சதானந்தன் 5 ஓட்டங்களும், என். வகிலிபுரநாதன், 3 ஓட்டங்களும், ஏ. சிவமோகன 9 ஓட்டங்களும், கே. முத்துக்குமார் தனது விக்கெட்டை இழக்காமல் 5ஓட்டங்களும் பெற்றனர். எஸ். வசந்தன், மனுவல்பிள்ளை ஆகியோர் ஒரு ஓட்டமும் பெறாமல் விக்கெட்டுகளை இழந்தனர்.

இச்சந்தர்ப்பத்தில் சென் ஜோன்ஸ் கல்லூரியின் பந்தெறி வீரர்களான வாமதேவன் 26ஓட்டங்கள் நஷ்டத்துக்கு ஒரு விக்கெட்டையும் விபுலானந்தன் 20 ஓட்டங்கள் நஷ்டத்துக்கு2விக்கெட்டுகளையும், எஸ். டி. குலநாதன் 15 ஓட்டங்கள் நஷ்டத்துக்கு 3விக்கெட்டுகளையும், எஸ். நவரத்தினராசா 24 ஓட்டங்கள் நஷ்டத்துக்கு 2 விக்கெட்டுகளையும்முறையே வீழ்த்தினர்.

இதை அடுத்து சென் ஜோன்ஸ் கல்லூரி வீரர்கள் தமது முதலாவது இனிங்ஸ் துடுப்படி ஆட்டத்தை ஆரம்பித்தனர். இவர்கள் சகல விக்கெட்டுகளையும் இழந்து மொத்தம் 151 ஓட்டங்களைப் பெற்றனர். இதில் ஜே. நவறட்னராசா 9 ஓட்டங்களையும், கே. சிவபாலன் 5 ஓட்டங்களையும், ரி. விபுலானந்தன் 31 ஓட்டங்களையும், எம். ஜெயறெட்ணம் 10 ஓட்டங்களையும், எம். சுரேந்திரா 4ஓட்டங்களையும், எஸ். டி. குலநாதன் 13ஓட்டங்களையும். எம். தெய்வேந்திரன் 38ஓட்டங்களையும். கணேசலிங்கம் 12 ஓட்டங்களையும், கே. எஸ். மகாலிங்கம் 10 ஓட்டங்களையும், என். வாமதேவன் ஒரு ஓட்டத்தையும், வி. அரசரத்தினம் ஆட்டத்தை இழக்காமல்2ஓட்டங்களையும்பெற்றனர்.

இச்சந்தர்ப்பத்தில் ஹாட்லிக் கல்லூரியின் பந்தெறி வீரர்களான கே. முத்துக்குமார் 21ஓட்டங்கள் நஷ்டத்திற்கு 2ஓட்டங்களையும், எம். செல்வானந்தராசா 36 ஓட்டங்கள் நஷ்டத்திற்கு 4 விக்கெட்டுகளையும், பி. ஆர். மனுவல்பிள்ளை 12ஓட்டங்கள் நஷ்டத்திற்கு2விக்கெட்டுகளையும் முறையே வீழ்த்தினர். இரண்டாம் இனிங்சில் முதலில் துடுப்பெடுத்தாடிய ஹாட்லிக்கல்லூரி சகல விக்கெட்டுகளையும் இழந்து மொத்தம் 121ஓட்டங்களைப் பெற்றது.

இச்சந்தர்ப்பத்தில் சென் ஜோன்ஸ் பந்தெறி வீரர்களான வாமதேவன் 37 ஓட்டங்கள் நஷ்டத்திற்கு 3விக்கெட்டுகளையும், விபுலானந்தன் 35ஓட்டங்கள் நஷ்டத்திற்கு 3 விக்கெட்டுகளையும், ஜே. நவறட்னராசா 17ஓட்டங்கள் நஷ்டத்திற்கு 3விக்கெட்டுகளையும், அரசரத்தினம் 15 ஓட்டங்கள் நஷ்டத்திற்கு ஒரு விக்கெட்டையும் முறையே வீழ்த்தினர்.

சென் ஜோன்ஸ் வீரர்கள் துடுப்பெடுத்தாடி 3விக்கெட்டுகளை இழந்து 81ஓட்டங்களைப்பெற்று ஆட்டத்தை நிறுத்திக் கொண்டனர்.

இச்சந்தர்ப்பத்தில் ஹாட்லிக் கல்லூரியின் பந்தெறி வீரர்களான முத்துக்குமார் 28ஓட்டங்கள் நஷ்டத்திற்கு ஒரு விக்கெட்டையும், செல்வானந்தராசா 18ஓட்டங்கள் நஷ்டத்திற்கு ஒரு விக்கெட்டையும், ஸ்ரீதரன் 5ஓட்டங்கள் நஷ்டத்திற்கு ஒரு விக்கெட்டையும்முறையேவீழ்த்தினர்,

(வி. நி.)

## சுதந்திரதின போட்டிமுடிவுகள்

சங்கானை, புதன்

சங்கானையில் நடைபெற்ற சுதந்திரதின விழாவில்பங்கு பற்றிய விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்றோர் விபரம் வருமாறு:

சைக்கிள் ஓட்டப் போட்டி: ரி. உதயகுமார் சங்கானை, ரி. விக்கினேஸ்வரன் சங்கானை, கே. இராசேந்திரம் ஆனைக்கோட்டை.

வலி-மேற்குப் பிரிவில் நடைபெற்று வந்த பிரிவு (அ) கரபந்தாட்ட சுற்றுப் போட்டிகளில் இறுதியாக சுதுமலை நாவலர் விளையாட்டுக் கழகமும், சங்கானை மேற்கு விளையாட்டுக்கழகமும் மோதிக் கொண்டன, பழையவிதியிலேயேமேலால் அடித்தல் [ஓவர்கேம்] முறைப்படி நடைபெற்ற இப்போட்டியில் 11 - 14; 15 - 14; 14 - 8 புள்ளிகளால் சுதுமலை நாவலர் கழகம் வெற்றியீட்டியது. திரு. கே. நாகமணி மத்தியஸ்தம் வகித்தார்.

## மகாசங்காபிஷேகம்

யாழ்ப்பாணம், வியா.

வண்ணை ஸ்ரீ காமாட்சி அம்பாள் தேவஸ்தானத்தில் [நாச்சிமார்கோவில்] இம்மாதம் 12-ந் திகதி பகல் மகாசங்காபிஷேகமும் இரவு 8 மணிக்கு மஞ்ச உற்சவமும் நடைபெறும். அன்று மணவாளக்கோலத்தில் சுவாமி எழுந்தருளுவார்.


### விளம்பரம்

## தேவை

பண்டத்தரிப்புக் கோவிற்பற்று ப. நோ. கூ. சங்கங்களின் சமாசத்திலுள்ள கீழ்க்காணும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. கணக்கு லிகிதர்

தகமைகள்:

[அ] விண்ணப்பதாரர் B.com. பட்டதாரியாக அல்லது அதற்குச் சமமான தராதரமுடையவராக இருத்தல் வேண்டும். கணக்கியல் [Accounts] கணக்குப் பதிவியல் [Book-keeping] என்பனவில் தராதரமுடையவர்கள் விசேடமாகக் கவனிக்கப்படுவர்.

[ஆ] 25 வயது துவக்கம் 40 வயது வரை.

[இ] சம்பளம்: ரூ. 250/- [எல்லாம் உட்பட].

[ஈ] பிணை: காசுப் பிணை ரூபா 1000/-.[ஆயிரம்].

II. காவலாளி

[அ] வயது: 30 வயதிற்கு மேற்பட்டவர்கள்.

[ஆ] காவல் வேலையில் அனுபவமுள்ளவர்கள்.

[இ] துவக்கு லைசன்ஸ் உள்ளவர்களின் விண்ணப்பங்கள் விசேடமாகக் கவனிக்கப்படும்.

(ஈ) சம்பளம்: ரூ. 75/- [எழுபத்தைந்து ரூபா எல்லாம் உட்பட.]

விண்ணப்பங்கள் தலைவர், பண்டத்தரிப்புக் கோவிற்பற்றுப் ப. நோ. கூ. சங்கங்களின் சமாசம், பண்டத்தரிப்பு என்னும் முகவரிக்குப் பதிவுசெய்யப்பட்ட கடிதங்களில் 20-2-68-க்கு முன்பதாக அனுப்பிவைத்தல் வேண்டும்.

தலைவர்
பண்டத்தரிப்புக்
கோவிற்பற்று ப. நோ. கூ.
ச. சமாசம்,
பண்டத்தரிப்பு.
7-2-68 439

## தேவை

தெல்லிப்பழை ஐக்கிய வைத்தியசாலைக்குப் பயிற்சி பெற்ற பெண் தாதிகள் உடனடியாகத் தேவை. தராதரம், வயது முதலிய விபரங்களுடன் 18-2-68-க்கு முன்னராக விண்ணப்பிக்கவும். 437

**ராஜா**
(யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-30
போயாதினங்களில்4காட்சி
7வது வாரம்!
எம். ஜி. ஆர்.-ஜெயலலிதா
நடித்த
**காவல்காரன்**

**REGAL** JAFFNA
Daily at
4-40, 7-00, & 9-45 p.m.
Jack Lemmon & Virnalsi
in
**How to Murder Your Wife**
[Technicolor]

**MANOHARA**
JAFFNA
Daily at 4-45,7-00, 9-45P.M
Nicola Parenti&LucretiaLove
in
K. O. Fourto Go
[Adults only]

**கெப்பிட்டல்** [கொழும்பு] **பிளாஸா** [வெள்ளவத்தை] **மைலன்** [ஜிந்துப்பிட்டி]
**வெலிங்டன்** [யாழ்ப்பாணம்] **விஜயா** [மட்டக்களப்பு] **ஸ்ரீகிருஷ்ணு** [திருமலை]
**மொடர்ன்** [பதுளை] **ராஜ்** [நீர்கொழும்பு]
ரவிச்சந்திரன், கல்பனா, நாகேஷ்
நடித்த



# மதராஸ்
To
# பாண்டிச்சேரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத்தில் அரிசி விலை குறைகிறது

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ்ப்பாணத்தில் இப்போது அரிசியின் விலை குறைந்துகொண்டு வருவதாகத் தெரிய வருகிறது.

புன்னாலைக் கட்டுவனிலுள்ள ஒரு அரிசி ஆலைச் சொந்தக்காரர் தாம் ஒரு மூட்டை அரிசி 90 ரூபா வீதம் கொடுக்கத் தயாராகவிருப்பதாக வடபகுதி பொலீஸ் சுப்ரீண்டன் திரு. சுந்தரலிங்கத்திடம் தெரிவித்ததாகத் தெரிகிறது.

இதன்படி ஒரு படி அரிசியை ரூபா 1-20க்கு விற்பனை செய்தாலும் சில்லறை வர்த்தகர் ஒருவர் 8 சதம் லாபம் பெற முடியுமெனத் தெரிகிறது.

யாழ்ப்பாணத்தில் அரிசி விலையைக் கட்டுக்குள் கொண்டுவர வடபகுதி பொலிஸ் சுப்ரீண்டன் துரித முயற்சி மேற்கொண்டு வருகிறார் என்பதும் இதுசம்பந்தமாக அரிசி ஆலைச் சொந்தக்காரர்களைக் கொண்ட மகாநாடு நடத்தப்பட்டதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## கிராமசபை தேர்தல்கள்

யாழ்ப்பாணம். வியா.

இம்மாதம் 24-ம் திகதி புலோப்பளை, நல்லூர், கச்சாய் ஆகிய கிராமசபைத் தேர்தல்களுக்கான நியமனப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படவிருக்கின்றன. 28-ம் திகதி நெடுந்தீவுகிராமசபைத்தேர்தலுக்கான நியமனப்பத்திரமும் அடுத்த மாதம் 2-ம் திகதி வட்டுக்கோட்டை கோப்பாய் ஆகிய கிராமசபைகளின் தேர்தலுக்கான நியமனப்பத்திரங்களும் ஏற்றுக்கொள்ளப்படும். (நி)

## சேவைநலம் பாராட்டு

யாழ்ப்பாணம், புதன்

இடமாற்றம் செய்யப்பட்டுள்ள புதுக்குடியிருப்பு மகாவித்தியாலயத்தில் ஆசிரியையாகக் கடமையாற்றிய திருமதி க. சதாசிவத்தின் சேவையைப் பாராட்டி வித்தியாலயத்தின் ஆசிரியர்சங்கம் அவருக்கு ஒரு பிரிவுபசாரம் நடத்தியது.

இவ்விழாவில் பலர் திருமதி க. சதாசிவத்தின் சேவையைப் பாராட்டி பரிசில்கள் வழங்கிக் கௌரவித்தனர். இவருக்கு ஒரு பகல்போசன விருந்தும் அளிக்கப்பட்டது. திருமதி சு. சதாசிவம் தற்பொழுது புதுக்குடியிருப்பு சி. சி.பாடசாலைக்கு இடமாற்றம்செய்யப்பட்டுள்ளார். வி. நி.

## ஆஸ்பத்திரியில் மரணம்

சங்கானை, புதன்

சங்கானையில் சமீபத்தில் நடைபெற்ற கலவரத்தில் படுகாயமடைந்து யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் அனுமதித்திருந்த வன்னியன் குமரேசர் இன்று மரணமானார். மல்லாகம் மாஜிஸ்டிரேட் திரு. சண்முகலிங்கம் ஸ்தல விசாரணை நடத்தினார். கந்தன் துரையன் என்பவர் சாட்சியமளித்தார். நான்கு பேரைக் கைது செய்யும்படி வாறண்ட் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

கோ. ஆறுமுகம்பிள்ளை, கே. சுப்பையா. இ. நடேசு, சுப்பிரமணியம் ஆகியோரை கைது செய்யும்படி உத்தரவிடப்பட்டவர்களாவர். 14-ந் திகதிக்கு மேல் விசாரணை ஒத்திவைக்கப்பட்டது.

## எண்ணெ ஊழியர் பிரச்னை

கொழும்பு, புதன்

பெட்ரோலியம் கூட்டுத்தாபன ஊழியர்கள் மேற்கொண்டிருந்த தாமத வேலைஇயக்கம் கைவிடப்பட்டுள்ளது. இதனால் பெட்ரோல், மண்ணெண்ணை தட்டுப்பாடு ஏற்படும் என்ற அச்சம் நீங்கியுள்ளது.

பெட்ரோலியம் கூட்டுத்தாபன ஊழியர்கள் இன்று சம்பந்தப்பட்ட மந்திரியை சந்தித்து தங்கள் சேமலாப நிதிப் பிரச்னை குறித்து பேச்சுவார்த்தைகள் நடத்தினார்கள். அவர்களின் பிரச்னை குறித்து கவனிப்பதாக மந்திரி வாக்களித்துள்ளார்.

தங்க நகைகள்

## பொலிசார் கைப்பற்றினர்

குரும்பசிட்டி, புதன்

அச்சுவேலி பத்தமேனிப் பகுதியில் ஒருவரது வீட்டில் திடீர் பரிசோதனை நடாத்திய காங்கேசன்துறைப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. எஸ். வி. மூர்த்தி தலைமையிலான பொலிஸ் கோஷ்டியினர் சுமார் 20 ஆயிரம் ரூபா பெறுமதி வாய்ந்த தங்க நகைகளைக் கைப்பற்றியுள்ளனர். கைப்பற்றப்பட்டுள்ள நகைகள் லைசென்ஸ் இன்றி அடகு வைக்கப்பட்டிருந்தன என்பது பொலிஸ் விசாரணையின்போது தெரியவந்துள்ளது.

## மின்சாரம் இல்லை மக்கள் அதிருப்தி

அளவெட்டி, வியா.

மின்சார விஸ்தரிப்புக்கு மல்லாகம் கிராமசபைக்கு அரசாங்கம் வழங்கிய 19,0000ரூபாவைபலமாதம் கடந்தும் பயன்படுத்தாமல் இருப்பதையிட்டு இப்பகுதி மக்கள் அதிருப்தி அடைந்துள்ளனர்.

பணம் கிடைத்து பல மாதங்களாகியும் இது சம்பந்தமாக எந்த ஒரு மின்சார ஒப்பந்தக்காரருடனும் எதுவித ஒப்பந்தமும் செய்யப்படவில்லையாம்.

மல்லாகம் கிராமசபை முன் இம்மின்சார இணைப்பு மாதிரிப் படத்தில் ஒரு பகுதிக்கு மாத்திரம் மின் இணைப்பு இடம்பெற அமைந்ததை அளவெட்டி வடக்கு மக்கள் ஆட்சேபித்து தமது பகுதிக்கும்மின்சாரம் வழங்க வேண்டுமெனக் கேட்டிருந்தனர்.

இதையடுத்து மல்லாகம் கிராமசபை அளவெட்டி வடக்கு மக்களுக்கும் மின் இணைப்பு ஏற்படுத்த ஏற்ற நடவடிக்கை எடுப்பதாக அறியப்படுகிறது. கடைசியில் கிராமசபை பணத்தைப் பெற்றும் எப்... [illegible] ...பெருந்தலையிட்டு மக்கள் கவலை அடைந்துள்ளார்கள்.

## இன்று நாவலப்பிட்டியில் சங்காபிஷேக விழா

நாவலப்பிட்டி, வெள்ளி

நாவலப்பிட்டி ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தான [1008] சங்காபிஷேக விழா இன்று நடைபெறுகிறது.

பிரதமகுருவாக, பிரம்மஸ்ரீ சாமி விஸ்வநாதக் குருக்கள் (அட்டகிரிகந்தசாமி தேவஸ்தான—நவாலி வடக்கு) தலைமையில் யாகபூசை, மஹா சங்காபிஷேகம், சாயரட்சை பூஜைகள் நடைபெறும்.

பின்னர் ஸ்ரீ அம்பாள் உள்வீதி உலா உற்சவம் நடாத்தப்படும்.

## பதுளையில் மூவர் பலி கடும் குளிருக்கு

பதுளை, வியாழன்.

பதுளையில் நிலவும் கடும் குளிருக்கு மூவர் பலியாகியுள்ளனர். பதுளை மணிக்கூட்டருகே ஒருபெண்ணும், பஸ் நிலையத்துக்கருகேஒருபெண்ணும், பதுளை விகார கொடையில் ஒருவரும் இறந்த நிலையில் கிடந்தார்கள்.

இவர்கள் மூவரும் தமிழர்களென மரணவிசாரணையின் போது தெரிவிக்கப் பட்டது. மூவரின் மரணமும் இயற்கை மரணமெனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

## கருணாநிதி வழக்கில் கண்ணதாசன் அப்பீல்

சென்னை. பெப். 8.

தமிழகபொதுப்பணிஅமைச்சர் தி.மு.க. கருணாநிதிசம்பந்தப்பட்ட மான நஷ்ட வழக்கில் 500 ரூபாய் அல்லது 2மாதசிறைத்தண்டனைவிதிக்கபட்டிருந்த கவிஞர் கண்ணதாசன் அப்பீல் செய்துள்ளார். கவிஞர் கண்ணதாசனின்அப்பீல்மனுவை நேற்று முன்தினம் சென்னை உயர்நீதிமன்ற நீதியரசர் ஏற்றுக்கொண்டார்.

## தேவாரம் ஓதி திருமணம் செய்து வைத்தார்

நாவலப்பிட்டி, வியா.

தேவார திருவாசகம் ஓதி திருமணம் ஒன்றை ஆத்மஜோதி ஆசிரியர் நடாத்திவைத்து வாழ்த்தினார்.

ஹேவாஹெட்டஸ்ரீலங்கா ஸ்டோர்ஸ் உரிமையாளர் திரு. ஆர். பெரியசாமியின் சகோதரரது திருமணம் கடந்த 4-ம் திகதி அதே இடத்து ஸ்ரீ சிவசுப்பிரமணியர் ஆலயத்தில் நடைபெற்றது.

தேவார திருவாசகம் ஓதி, யாகம் வளர்த்து, வாழ்த்திசகலமும் தமிழில் நடாத்திவைத்தார் நாவலப்பிட்டி ஆத்மஜோதி ஆசிரியர் திரு. நா. முத்தையா.

## அரபுநாடுகள் வெளிநடப்பு

புதுடில்லி, பெப். 7

ஐ. நா.வின் இரண்டாவது வர்த்தக அபிவிருத்தி மகாநாட்டில் இன்று இஸ்ரேலிய பிரதிநிதி பேசுவதற்கு எழுந்தபொழுது அரபுநாட்டுப் பிரதிநிதிகளும் வேறு சில நாடுகளைச் சேர்ந்தவர்களும் வெளிநடப்புச் செய்தார்கள்.

ரஷ்யப் பிரதிநிதி பேசுகையில், அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுடன் பொருளாதார அபிவிருத்திக்கான நெருங்கிய தொடர்புகள் வைத்துக்கொள்வதில் தமது நாடு பெரிதும் அக்கறை கொண்டிருப்பதாகக் கூறினார்.

மாவட்டசபை மசோதா

# சமஷ்டிக்கு தொடர்பில்லை

## ஹேமாபஸநாயகாவுக்கு பிரதமர் பதில்

கொழும்பு, வியா.

கற்பனையில் காணும் சமஷ்டி ஆட்சி அமைப்புக்கும் உத்தேச மாவட்ட சபை மசோதாவுக்கும் எதுவித தொடர்புமில்லை என்று பிரதமர் திரு. டட்லி சேனநாயகா தெரிவித்திருக்கிறார்.

மாவட்ட சபை மசோதா பற்றிய அச்சமும் ஐயமும் தெரிவித்து முன்னாள் பிரதம நீதியரசர் திரு. ஹேமபஸநாயக்கா எழுதியிருந்த கடிதத்துக்கு எழுதியுள்ள பதிலிலேயே பிரதமர் மேற்கண்டவாறு தெரிவித்திருக்கிறார்.

மாவட்டசபை மசோதா தயாரானதும் மந்திரிசபை அதை முதலில் பரிசீலனை செய்யுமென்றும் பின்னர் பார்லிமெண்டரிக் குழு அதைப்பற்றி விவாதிக்குமென்றும் அதன் பின்னரே பார்லிமெண்டுக்குக் கொண்டுவரப்படுமென்றும் பிரதமர் தமது கடிதத்தில் தெரிவித்திருக்கிறாராம். பார்லிமெண்டில் மசோதா விவாதிக்கப்பட்ட பின்னர் நிரந்தரக் குழுவின் பரிசீலனைக்குவிடப்படுமென்றும் பிரதமர்தெரிவித்திருப்பதாக அறியப்படுகிறது.

மத்திய அரசாங்கத்தின் கட்டுப்பாட்டின்கீழ் தான் இயங்கும்என்பதை பலதடவைகள் எடுத்துக்கூறியிருப்பதாகவும் பிரதமர்தெரிவித்திருக்கிறார்.

திருமலை சுதந்திர விழா

# 'எதிர்ப்பு இருந்தது உண்மைதான்; ஆனால்'

## கோணேசர் ஆலய பரிபாலன சபை உபதலைவர் கூறுகிறார்

திருகோணமலை, புதன்

திருகோணமலையில் சுதந்திர தினக் கொண்டாட்டத்தைக் கொண்டாடுவதற்கு இங்கு மக்களிடையே எதிர்ப்பு இருந்தமை உண்மைதான். கோணேசர் ஆலயப் பிரதேசத்தை பிரதமமந்திரி சுதந்திரதினத்திற்கு முன்புபுனித நகராக்கித்தரவேண்டுமென இங்குள்ள பெரும்பாலோர் விரும்பினர். அவர்களது ஆசை நிறைவேறாததினால் தான் இந்த எதிர்ப்புமனப்பான்மை தோன்றியது. ஆனால் அதுவும் பின்பு மறைந்துவிட்டது. சுதந்திரதினத்தை எல்லேரும்வேறுபாடுகளைக் களைந்துவிட்டு கோலாகலமாக கொண்டாடினர்.

என்று கோணேசர் ஆலயப் பரிபாலன சபை உபதலைவரும் வழக்கறிஞருமான திரு, எம். கே. செல்வராசா கருத்துத் தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில் சுதந்திரதினம் இங்கு பெரிதாகக் கொண்டாடப் பட்டமையினால் நகர வீதிகள் எல்லாம் சீர்திருத்தப்பட்டு நகரமே இப்போது புதிய அழகுடன் விளங்குகின்றது. அதுபோல மக்களின்மனமும்சீர் பெற்று எழில் ஒளி வீசுகின்றது. நாம் சிறுவிடயங்களுக்கெல்லாம் எதிர்ப்பையும் போட்டியையும் வளர்க்காது அரசாங்கத்துடன் எப்படியும் ஒத்துழைக்க வேண்டும். அதே வேளையில் எமது உரிமைகளையும் விட்டுக்கொடுக்கக் கூடாது என்றார்.

இப்போதுகோணேசர்ஆலயம் திருமலை நகராண்மைக் கழகத்தின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது. எனவே கோணேஸ்வரர்ஆலயத்தை புனித நகராக்கும் பணியை திருமலை நகராண்மைக் கழகம் மேற்கொள்ளும் எனத் தெரிகிறது.

[மானி. நி]

## கம்யூனிஸ்ட்கிளை அங்குரார்ப்பணம்

அளவெட்டி, வியாழன்

வலி வடக்கு கம்யூனிஸ்ட் கட்சிக்கிளை ஏழாலையில் அங்குரார்ப்பணம் செய்து வைத்தபோது நடப்பு வருட உத்தியோகத்தர்களாகபின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் தா. சண்முகநாசன், உபதலைவர்- நா. நரேந்திரன், காரியதரிசி சி. அருச்சுனன், உப காரியதரிசி சி. இலட்சுமிகாந்தன், தனாதிகாரி சி. பாலசுப்பிரமணியம் உபதனாதிகாரி மு. கார்த்திகேசு.

## இடமாற்றம்

யாழ்ப்பாணம், வெள்ளி

மாத்தளை மாவட்டத்தில் உள்ள அஜ்மீர் மகாவித்தியாலயத்தில் கடந்த எட்டு ஆண்டுகளாகக் கடமையாற்றிய ஆசிரியர் திரு ஜே. எஸ். கிறிஸ்ததாஸ் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரிக்கு 1-1-68 தொடக்கம் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்

## நாட்டிலும் நகரிலும்

[2-ம் பக்கத்தொடர்ச்சி

பிரிட்டிஷ்கவனர்களும் பிரிட்டிஷ் அரசவம்சத்தினரும் அடிக்கடி ஹோரகொல்லைக்கு சென்று சேர். சொலமனின் விருந்துபசாரங்களை ரசித்து மகிழ்வார்கள். மிருகக்காட்சி சாலைபோல அங்கே பல வனவிலங்குகளும் பட்சிகளும் வளர்க்கப்பட்டு வந்தன.

இந்த டாம்பீக வாழ்க்கையைத்தான் சேர். பாரன் சுட்டிக்காட்டி இளம் பண்டாவின் வாயை அடக்கினார்.

—வழிப்போக்கன்

## திருமணம்

மணமகன்- செல்வன் எஸ். கனகரத்தினம், 52, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். மணமகள்- செல்வி அன்னபூரணம் வேலுப்பிள்ளை, மணிக்கூட்டு ஒழுங்கை, யாழ்ப்பாணம். இடம்- தொண்டமானாறு செல்வச்சந்நிதி கோவில். காலம்- இன்று (9-2-68) வெள்ளிக்கிழமை பிற்பகல் 4-30—6-30. வரவேற்பு- 10-ந் திகதி பிற்பகல் 4-30. 9, மணிக்கூட்டு ஒழுங்கை, யாழ்ப்பாணம். திருமணத்திற்கும் வரவேற்புக்கும் உறவினர், நண்பர்கள் யாவரையும் அன்புடன் அழைக்கின்றார்கள். 1893

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் ஆண்டு பெப்ரவரி மாதம் 9-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org